1972 சனவரி 28]

கூட்டுறவு சங்க ஊழியர்களுக்கு வைத்திய வசதிகள்

*** 95 வினா.—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு E.S.I. போன்ற வைத்திய வசதிகள் செய்து தர அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இல்லை.

நீடாமங்கலம் கூட்டுறவு விவசாய வங்கி

*** 96 வினா.—திரு. ந. சோமசுந்தரம் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீடாமங்கலம் கூட்டுறவு விவசாய வங்கியில் கையாடல் காரணமாக 10—9—1971-ந் தேதி அன்று எழுத்தர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ & இ) ஒரு எழுத்தர் தற்கொலை செய்து கொண்டது உண்மை. கையாடல் பற்றி விசாரணை நடந்து வருகிறது.

திரு. ந. சோமசுந்தரம் : இந்த எழுத்தர் தற்கொலை செய்து கொண்டதன் மூலம் அந்த வங்கிக்கு எவ்வளவு ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது ? இதனால் வங்கி உறுப்பினர்கள் எந்த அளவு பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்பதை உத்தேசமாகவாவது அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : விசாரணை நடந்து வருகிறது என்று சொன்னேன். இந்தக் கூட்டுறவுக் கழகத்திற்கு நண்பர் சோமசுந்தரம் அவர்கள் துணைத் தலைவர் என்று கருதுகிறேன். அவர்களுக்கு உத்தேசமாக எவ்வளவு என்பது மிக நன்றாகத் தெரியும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அவருக்குத் தெரிந்திருந்தாலும் சட்டமன்றத்திற்குத் தெரிய வேண்டுமென்ற வகையிலே அந்தத் தகவலைக் கொடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : எவ்வளவு என்ற தகவல் விசாரணைக்குப் பிறகுதான் தெரியமுடியும்.

திரு. ந .சோமசுந்தரம் : அந்த வங்கிக்கு ஒரு காங்கிரஸ்காரர் தலைவர் என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அந்த வங்கிக்கு ஒரு தலைவர் உண்டு. அவர் காங்கிரஸ்காரரா என்பது தெரியாது.